வணக்கம்

**ஆகாஷ்வாணி-புதுச்சேரி**

**மாநிலச் செய்திகள்**

**வாசிப்பவர் : நாராயணசாமி**

**தேதி 20.07.2025 நேரம் மாலை 6.10 மணி**

---

தலைப்புச் செய்திகள்

இந்தியா தனது விவகாரங்களை எவ்வாறு கையாள வேண்டும் என்பதற்கு ஆணையிட பூமியில் எந்த சக்தியும் இல்லை என்று குடியரசு துணைத் தலைவர் திரு ஜக்திப் தன்கர் தெரிவித்துள்ளார்.

பிரதமர் திரு நரேந்திர மோடி அரசு முறை பயணமாக வரும் புதன் கிழமை பிரிட்டன், மாலத்தீவு ஆகிய நாடுகளுக்கு செல்கிறார்.

நாடாளுமன்ற மழைக்கால கூட்டத் தொடர் நாளை தொடங்குவதை ஒட்டி, புதுடெல்லியில் அனைத்து கட்சி கூட்டம் இன்று நடைபெற்றது.

சர்வதேச சதுரங்க தினம் இன்று கொண்டாடப்படுகிறது. இதனைஒட்டி பல்வேறு நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டன.

தன்கர் (19)

இந்தியா தனது விவகாரங்களை எவ்வாறு கையாள்வது என்பதற்கு ஆணையிட பூமியில் எந்த சக்தியும் இல்லை என்று குடியரசு துணைத் தலைவர் திரு ஜக்திப் தன்கர் தெரிவித்துள்ளார். இந்திய பாதுகாப்பு, எஸ்டேட் சேவை-2024 பிரிவின் பயிற்சி அதிகாரிகளிடம் உரையாற்றிய திரு தன்கர், இறையாண்மை கொண்ட இந்த நாட்டில், அனைத்து முடிவுகளும் அதன் தலைமையால் எடுக்கப்படுகின்றன என்று கூறினார். இதனால் பிரிவினையை உருவாக்கும் முயற்சிகள் சவால்கள் நிறைந்ததாக இருக்கும் என்று மேலும் தெரிவித்தார். இந்தியாவின் மக்கள் தொகை உலக அளவில் பொறாமைப்பட வைப்பதாகவும், ஏனெனில், 65 சதவிகிதம் பேர்

35 வயதுக்கு உட்பட்டவர்கள் என்றும் அவர் கூறினார். ஆபரேஷன் சிந்தூர் நடவடிக்கையின் போது பொதுமக்களை தாக்காமல் பயங்கரவாத உள்கட்டமைப்பை மட்டுமே குறிவைத்த இந்தியாவின் முடிவை பாராட்டிய அவர், இந்தியா அமைதி மற்றும் அகிம்சையை நம்புவதாக தெரிவித்தார். உலகமே பொருளாதார மந்த நிலையில் சிக்கி தவித்த போது, இந்தியாவின் பொருளாதாரம் வலுவாக இருந்ததை யாரும் எதிர் பார்க்காததால் அதன் எழுச்சியை ஜீரணிக்க முடியாமல் சில சக்திகள் இருப்பதாக தெரிவித்தார். இந்தியாவின் நோக்கம் அதன் பொருளாதாரத்தை வளர்ப்பது மட்டும் அல்ல. மக்களை மேம்படுத்துவது என்று அவர் மேலும் கூறினார்.

*மோடி பயணம்* (15)

பிரதமர் திரு நரேந்திர மோடி அரசு முறை பயணமாக வரும் புதன் கிழமை பிரிட்டன், மாலத்தீவு ஆகிய நாடுகளுக்கு செல்கிறார். இதுகுறித்து மத்திய வெளியுறவு அமைச்சகம் வெளியிட்டுள்ள செய்தியில், பிரதமர் இப்பயணத்தின் போது அந்நாட்டு தலைவர்களுடன் இருதரப்பு உறவுகள், பாதுகாப்பு ஒத்துழைப்பு, வர்த்தகம் உள்ளிட்ட துறைகளில் ஒத்துழைப்பு தொடர்பான பேச்சுவார்த்தை மேற்கொள்கிறார் என தெரிவித்துள்ளது. குஜராத் மாநிலம் கட்சி பகுதியின் அழகை எடுத்துரைக்கும் டிவிஎஸ் குழுமத்தின் புத்தக வெளியீட்டிற்கு பிரதமர் நரேந்திர மோடி பாராட்டு தெரிவித்துள்ளார். புதுடெல்லியில் டிவிஎஸ் குழும தலைவர் திரு வேணு ஸ்ரீனிவாசன் தம்மை சந்தித்தது குறித்து அவர் வெளியிட்டுள்ள செய்தியில், இருசக்கர மோட்டார் வாகனத்தில் கட்சி பகுதியின் இயற்கை அழகை விவரிக்கும் இந்த புத்தகம் இளைஞர்களிடையே கட்ச் சுற்றுலா ஆர்வத்தை அதிகரிக்கும் என தெரிவித்துள்ளார். இப்பகுதியின் கலாச்சாரம் நிலப்பரப்புகள் பாரம்பரியத்தை வெளிப்படுத்தும் ரான் உத்ஸவ் 2025 காஃபி டேபிள் புக் என்ற இப்புத்தகம் எடுத்துரைப்பதாக குறிப்பிட்டுள்ளார்.

*மழைக்கால கூட்டத் தொடர்* (13)

நாடாளுமன்ற மழைக்கால கூட்டத் தொடர் நாளை தொடங்குவதை ஒட்டி, புதுடெல்லியில் அனைத்து கட்சி கூட்டம் இன்று நடைபெற்றது. நாடாளுமன்ற விவகாரங்கள் துறை அமைச்சர் திரு கிரண் ரிஜிஜூ தலைமையில் நடைபெற்ற இக் கூட்டத்தில், மழைக்கால கூட்டத் தொடரை சுமுகமாக நடத்த எதிர்கட்சியினரின் முழுமையான ஒத்துழைப்பு கோரப்பட்டது. இக் கூட்டத்தில் மத்திய அமைச்சர்கள் திரு ஜே பி நட்டா, திரு அர்ஜூன் ராம் மெக்வால், டாக்டர் எல் முருகன், காங்கிரஸ் கட்சியின் திரு கவ்ரவ் கோகோய், திரு பிரம்மோத் திவாரி, திமுக வின் திரு டி ஆர் பாலு, திரு திருச்சி சிவா, சமஜ்வாதி கட்சியின் திரு ராம்கோபால் யாதவ் உள்ளிட்டோர் பங்கேற்றனர். அடுத்த மாதம் 21 ம் தேதி வரை 21 அமர்வுகளாக நடைபெற உள்ள மழைக்கால கூட்டத் தொடரில் ஜன் விஷ்வாஷ் சட்ட திருத்த மசோதா, தேசிய விளையாட்டு ஆளுமை மசோதா, வணிக கப்பல் போக்குவரத்து மசோதா உள்ளிட்டவைகள் குறித்து விவாதிக்கப்படும் என தெரிகிறது.

*தடுப்பூசி* (2)

Adfalcivax என்ற பல நிலை மலேரியா தடுப்பூசியை இந்தியா உருவாக்கி வருகிறது. இதுகுறித்த ஒருசெய்தித் தொகுப்பு.......

(வாய்ஸ் )

*வாய்ஸ்* (17)

Adfalcivax தடுப்பூசி மனித தொற்றுக்கு எதிராக பாதுகாப்பை வழங்குவதுடன், ஒட்டுண்ணியின் சமூக பரவலை குறைப்பதை நோக்கமாக கொண்டுள்ளது. Adfalcivax என்பது மலேரியாவின் மிகவும் ஆபத்தான நிலைக்கு காரணமான ஒட்டுண்ணியான பிளாஸ்மோடியம் - ஃபால்சிபாரத்தின் இரண்டு முக்கியமான நிலைகளை குறிவைக்க வடிவமைக்கப் பட்ட முதல் உள் நாட்டு மறு சீரமைப்பு தடுப்பூசியாகும். இந்திய மருத்துவ ஆராய்ச்சி கவுன்சில், உயிரி தொழில்நுட்பத் துறை-தேசிய நோய் எதிர்ப்பு நிறுவனத்துடன் இணைந்து, தற்போது இந்த தடுப்பூசியை உருவாக்கி வருகிறது. இந்தியாவில் தயாரிப்போம் என்பதற்கு ஏற்ப உள்நாட்டிலேயே உருவாக்கப் பட்ட இந்த தடுப்பூசி தொற்று நோயை தடுப்பதன் மூலமும், சமூக பரவலை குறைப்பதன் மூலமும் மலேரியா ஒழிப்புக்கு கணிசமான பங்களிக்கும் திறனை கொண்டுள்ளது. தகுதியுள்ள நிறுவனங்கள் மற்றும் உற்பத்தியாளர்களுக்கு Adfalcivax தொழில்நுட்பத்தை மேலும் விரிவுபடுத்த, உற்பத்தி செய்ய மற்றும் வணிகமயமாக்க பிரத்யேமற்ற ஒப்பந்தங்களின் கீழ் உரிமம் வழங்க ஐசிஎம்ஆர் திட்டமிட்டுள்ளது. இந்த அணுகுமுறை மக்களை சென்றடைவதையும், பொது சுகாதார நன்மைகளை அதிகரிப்பதையும் நோக்கமாக கொண்டுள்ளது.

*ஹர்திப் சிங்* (12)

நாட்டின் எண்ணெய் தேவையில் சுய சார்பை எட்டும் நடவடிக்கைகள் தொடர்ந்து நடைபெற்று வருவதாக மத்திய பெட்ரோலிய அமைச்சர் திரு ஹர்திப்சிங் புரி தெரிவித்துள்ளார். சமூக வலைதளத்தில் அவர் வெளியிட்ட செய்தியில், இதற்காக 10 லட்சம் சதுர கிலோ மீட்டர் எண்ணெய் கிணறுகளை தொடங்குவதற்கான வாய்ப்புகள் ஆராயப்பட்டுள்ளதாக தெரிவித்தார். இத்திட்டத்தின் கீழ், 99 சதவிகித பணிகள் நிறைவடைந்துள்ளதை சுட்டிக் காட்டிய அவர், இதன் மூலம்

எண்ணெய் மற்றும் எரிவாயு தொழிற்சாலைகள் மற்றும் தொழில்முனைவோருக்கு மிகச் சிறந்த வாய்ப்புகள் கிடைக்கும் என நம்பிக்கை தெரிவித்தார். மத்திய அரசின் நகர எரிவாயு விநியோக திட்டம் எரிசக்தி துறையில் புரட்சிகரமான மாற்றங்களை கொண்டு வந்துள்ளதாக அவர் பெருமிதம் தெரிவித்தார்.

*மன்சுக் மாண்டவியா* (6)

வாரணாசியில் உள்ள பனாரஸ் இந்து பல்கலைக் கழகத்தில் இன்று நடைபெற்ற பிட் இண்டியா சைக்கிள் ஆன் சண்டே பேரணிக்கு மத்திய இளைஞர் விவகாரங்கள் மற்றும் விளையாட்டுத் துறை அமைச்சர் டாக்டர் மன்சுக் மாண்டவியா தலைமை தாங்கினார். அனைத்து கல்வி நிறுவனங்களும் 6 ஆயிரத்திற்கும் மேற்பட்ட இடங்களில் இந்த சைக்கிள் பேரணியை நடத்துமாறு மத்திய அமைச்சர் செய்தியாளர்கள் இடையே பேசுகையில் வலியுறுத்தினார்.

*தேசிய இளைஞர் விழா* (15)

தேசிய இளைஞர் விழா 2025 வருகின்ற 23 ஆம் தேதி முதல் 25 ஆம் தேதி வரை ஹரியானா மாநிலத்தில் உள்ள குருஷேத்திரா பல்கலைக் கழகத்தில் நடைபெற உள்ளது. இந்நிகழ்ச்சியில் புதுச்சேரியின் கலாச்சாரத்தை பிரதிபலிக்கும் வகையில் நடனம் மற்றும் பாடல் நிகழ்ச்சிகளில் கலந்து கொள்ள 23 மாணவ – மாணவியர் தேர்வு செய்யப்பட்டுள்ளனர். நாட்டு நலப்பணித்திட்ட ஆசிரியர் டாக்டர் தாமோதரன், திரு முருகன் ஆகியோர் மாணவர்களை அழைத்து செல்கின்றனர். இன்று கலை பண்பாட்டுத் துறை அமைச்சர் திரு பி ஆர் என் திருமுருகனை அவரது அலுவலகத்தில் மரியாதை நிமித்தமாக சந்தித்த மாணவர்கள் மற்றும் ஆசிரியர்கள் வாழ்த்துகளை பெற்றனர். புதுச்சேரி

மாநிலத்தின் கலை மற்றும் பண்பாட்டினை இந்திய அளவில் மிகச் சிறப்பாக எடுத்துரைக்குமாறும், புதுச்சேரி, காரைக்கால், மாகே, ஏனாம் பகுதிகளில் உள்ள முக்கிய கலாச்சார நிகழ்ச்சிகள், உறவுமுறைகளை பற்றி எடுத்துரைத்து மாநிலத்திற்கு பெருமை சேர்க்குமாறு அமைச்சர் மாணவர்களை கேட்டுக்கொண்டார்.

*வானிலை* (6)

தென்னிந்திய பகுதிகளின் மேல் நிலவும் வளி மண்டல மேலடுக்கு சுழற்சி மற்றும் மேற்கு திசை காற்றின் வேக மாறுபாடு காரணமாக தமிழகத்தின் ஒரு சில இடங்களிலும், புதுச்சேரி – காரைக்கால் ஆகிய பகுதிகளிலும், வரும் 25 ஆம் தேதி வரை இடி-மின்னலுடன் கூடிய லேசானது முதல், மிதமான மழை பெய்யக் கூடும் என்று இந்திய வானிலை ஆய்வு கழகம் தெரிவித்துள்ளது.

*சதுரங்கம்* (10)

சர்வதேச சதுரங்க தினம் இன்று கொண்டாடப்படுகிறது. ஒவ்வொரு நகர்வும் முக்கியத்துவம் என்ற கருப்பொருளுடன் இந்தாண்டில் பல்வேறு நிகழ்ச்சிகள் நடைபெறுகின்றன. ஒருங்கிணைப்பு, கல்வி, ஆளுமை, மனநலத்திற்கான கருவியாக சதுரங்க போட்டிகள் திகழ்வது குறிப்பிடத் தக்கது. இதனை முன்னிட்டு, புதுச்சேரி மாநிலம் ஏனாமில் உள்ள ரிஜென்சி பப்ளிக் பள்ளியில் சர்வதேச சதுங்க தினம் இன்று கொண்டாடப்பட்டது. வகுப்புவாரியாக குழந்தைகளுக்கு போட்டிகள் நடத்தப்பட்டன. 1924 ல் நிறுவப்பட்ட சர்வதேச சதுரங்க கூட்டமைப்பை நினைவு கூறும் வகையில் இந்நாள் ஆண்டுதோறும் கொண்டாடப்படுகிறது. உலகம் முழுவதும் 178 இடங்களில் கொண்டாடப்படுகிறது.

விளையாட்டு (11)

பீடே மகளிர் சதுரங்க உலகக் கோப்பை 2025 ஜார்ஜியாவின் படுமியில் நடைபெற்று வருகிறது. இதன் காலிறுதி ஆட்டம் நேற்று தொடங்கியது. முதன் முறையாக 4 இந்திய வீராங்கனைகள் காலிறுதிக்கு தகுதி பெற்றுள்ளனர். இந்தியாவின் முன்னணி வீராங்கனையான கொனெரு ஹம்பி காலிறுதியில் சீனாவை சேர்ந்த சாங்கை எதிர் கொண்டு வெற்றி பெற்றார். சென்னை கிராண்ட்மாஸ்டர் வைஷாலி, திவ்யா, ஹரிகா ஆகியோர் இப்போட்டியில் உள்ளனர்.

அமெரிக்காவின் லாஸ் வேகாசில் நடைபெற்று வரும் ப்ரீ ஸ்டைல் செஸ் தொடரில் களம் இறங்கிய உலகின் நம்பர் 1 செஸ் வீரரான மெக்னஸ் கார்ல்சனை, தமிழக வீரர் பிரக்ஞானந்தா வென்றார். கடந்த 3 நாட்களில் கார்ல்சனை இரண்டாவது முறையாக பிரக்ஞானந்தா வீழ்த்தி உள்ளார்.